# நாடகப் பணியில் நாவலாசிரியர் இளங்கீரன்

## ஆழத்து முத்துக்கள் 128

**- தெளிவத்தை ஜோசப் -**

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஒரு தீவிர முனைப்புடன் செயலாற்றத் தொடங்கிய ஐம்பதுகளில் சங்கத்தின் ஒரு முக்கியப் பணியாளராக செயலாற்றியவர் அமரர் இளங்கீரன் அவர்கள்.

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்தில் 1927ல் பிறந்தவர் இவர் (4-1-1927) இவரது தந்தை சுல்தான் முகையிதின் ஒரு தையல்காரர். தாய் முஹியித்தின் நாச்சியார். இவருக்கு பெற்றோரிட்ட பெயர் முகம்மது கலீல். வீட்டில் அழைக்கப்பட்ட பெயர் சுபைர். இவர் தனது எழுத்துக்காக வைத்துக் கொண்ட புனைபெயர் இளங்கீரன். இலக்கியவாதிகளால் சுபைர் இளங்கீரன் என்றே அழைக்கப்பட்டவர். இந்தியா, சிங்கப்பூர், மலேசியா என்று வாழ்ந்த அனுபவஸ்தர். தமிழ்நாட்டில் 50களில் சில காலம் வாழ்ந்தபோது தி.மு.க.வின் பகுத்தறிவுப் பாசறையில் பயிற்சி கொண்டவர் என்பதால் அவருடைய நாவல்களிலும் நாடகங்களிலும் அந்த பயிற்சியின் சீர்த்திருத்தக் கருத்துக்கள் பின்னாட்களில் விரவி வந்தன. என்று குறிக்கின்றார் பேராசிரியர் கைலாசபதி.

அங்கிருக்கும்போது தான் ஒரு கல்லூரி மாணவர் விழாவுக்காக 'காதலன்' என்ற நகைச்சுவை நாடகத்தை எழுதியிருக்கின்றார். இதுவே இவர் எழுதிய முதல் நாடகம்.

1951ல் தாயகம் திரும்பிய பின் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவராகி சங்கத்தின் இலக்கியச் செயற்பாடுகளுக்கு உந்துதல் அளித்தார்.

ஈழத்து நாவல் வரலாற்றில் 50களையொட்டிய காலம் புதியதொரு சகாப்தத்தை கொண்டு வந்தது. இடதுசாரி அரசியல் கருத்துக்களையும், தேசியப் பிரச்சினைகள் இலக்கியத்தில் இடம்பெறவேண்டும் என்னும் கருத்தையும் முதன்மைப்படுத்திய இ.மு.எ.சங்கத்தின் மூல அங்கத்தவர்களாகிய இளங்கீரன், கே.டானியல், செ.கணேசலிங்கன், நீர்வை பொன்னையன், காவலூர் ராஜதுரை, டொமினிக் ஜீவா போன்றோரின் படைப்புக்கள் இக்கருத்தியல்களுக்காகவே குறிப்பிட்டுப் பேசப்பட்டன.

முற்போக்குவாதக் கருத்துக்களைக் கொண்டு சமூகப் பிரச்சினைகளை கதைப் பொருளாகக் கொண்டு நாவல் எழுதியவர்களில் மூத்தவர் இளங்கீரன் அவர்கள்.

50 களில் ஈழத்துத் தமிழ் நாவலுக்கு ஒரு புதிய பிரமாணத்தைக் கொடுத்தவர் என்ற வகையில் இளங்கீரன் வரலாற்று முக்கியத்துவம் கொண்டவர். ஏறத்தாழ இருபது நாவல்களை எழுதி சாதனை படைத்தவர் என்ற வகையில் மட்டுமல்லாமல் சமூகப் பிரச்சினைகளுக்கான அடிப்படைகளை அணுகித் தீர்வுகூற விழைந்த முதல் நாவலாசிரியர் என்ற வகையிலும் ஈழத்துத் தமிழ் நாவலுக்கு தேசியச் சாயல் தரமுயன்ற முதல்வர் என்றவகையிலும் இளங்கீரனுக்கு சிறப்பானதோர் இடமுண்டு என்று குறிக்கின்றார் பேராசிரியர் நா.சுப்பிரமணியன் அவர்கள். (ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் - குமரன் பதிப்பகம் பக்கம் 55)

இலங்கை வானொலி இவருடைய பல நாடகங்களை ஒலிபரப்புச் செய்துள்ளது. 1970களில் ஒலிபரப்பாகிய 'வாழப்பிறந்த வர்கள்' ஏறத்தாழ 2 வருடங்களுக்கு மேலாக ஒலிபரப்பப்பட்டு வானொலி ரசிகர்களின் அமோக ஆதரவினைப் பெற்ற தொடர்நாடகமாகும். 90 களில் சீதனப் பிரச்சினையை மையமாகக் கொண்ட 'வாழ்க்கை ஒரு சவால்' என்னும் தொடர் நாடகமும் பிரபல்யமானது.

'இவருடைய வானொலி நாடகங்கள் சில வற்றைத் தொகுத்து 'வெறுங் கனவல்ல' என்ற பெயரில் நூலாக்கியிருக்கிறது. கல்ஹின்னை தமிழ் மன்றம்.

1979 ல் பாரதி தினத்தையொட்டி வானொலிக்காக இளங்கீரன் எழுதிய நாடகம் 'மகாகவி பாரதி' என்பது. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடாத்திய பாரதி நூற்றாண்டு விழாவுக்காக இந்நாடகம் விரிவாக்கப்பட்டு மேடைக்கேற்ற நாடகமாக எழுதப்பட்டு கொழும்பு டவர் அரங்கில்



17.12.1982ல் மேடையேற்றப்பட்டது. மீண்டும் கொழும்பு பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் 20.03.1983ல் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பாரதி விழாவுக்காக தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த பேராசிரியர் எஸ்.ராமகிருஷ்ணன். சிதம்பர ரகுநாதன், ராஜம்கிருஷ்ணம் ஆகியோர் முன்னிலையில் மேடையேற்றப்பட்டது.

தமிழ்மொழிக்கும் தமிழ்க் கவிதைக்கும் புத்துயிரும், புதுப்பொலிவும், வலுவும் ஊட்டிய மகாகவி பாரதி பற்றிய இந்த நாடகம் அவரது புதுச்சேரி மறைவு வாழ்வு மற்றும் அன்றாட நடப்பியல் வாழ்வின் பொருள் சார்ந்த வறுமையுடன் பேராடிய அவரது மனைவி செல்லம்மாளுடனான போராட்டம் என்று ஒரு உயர் வாழ்வு வாழ்ந்த மகா கவியை நம்முடன் உலவ விட்ட நாடகம் இது. இதை கண்டு களிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததையிட்டுத் தான் மிகவும் மகிழ்வதாகக் குறிக்கின்றார் திருமதி ராஜம் கிருஷ்ணன் அவர்கள்.

இந்நாடகத்தில் பாரதியாக 'சுதாகரும் மனைவி செல்லம்மாளாக மணிமேகலையும் நடித்தனர்.

ஸ்ரீதர், செல்வம் பெர்ணாண்டோ, உமா, புஸ்பநாதன், சற்குணராஜா ஆகியோரும் நடித்துள்ளனர்.

கவிச்சக்கரவர்த்தி கம்பரைப் பற்றிய ஆதாரபூர்வமான வரலாறுகள் இல்லாத நிலையில், உழவர்களையும் உழவுத்தொழிலையும் சிறப்பிக்கும் 'ஏர் எழுபது' என்னும் கம்பரின் பிரபந்தத்தை முன்னிறுத்தி 'கவிதை தந்த பரிசு' என்னும் நாடகம் இவரால் 1976ல் வானொலிக்கு எழுதப்பட்டது.

பிறகு இது மேடைக்கேற்ற வகையில் மாற்றி எழுதப்பட்டு மேடை ஏற்றம் கண்டது.

1978 ல் மனுநீதிச் சோழனை மையமாகக் கொண்ட ஒரு நாடகத்தை வானொலிக்காக எழுதினார் இளங்கீரன்.

நீதி கேட்டு ஆராய்ச்சி மணியடித்த பசு பற்றிய கதை பிரச்சித்தமானது நாமனைவரும் அறிந்தது.

ஆனாலும் கன்று இறந்ததற்கு காரணம் இளவரசன் அல்ல. தற்காப்பற்ற தன்மையினால் தானே சாவைத் தேடிக் கொண்டது கன்று. இறந்த கன்றுக்காக தனது மகனை கொன்ற சோழனின் நீதி தவறானது என்னும் சேக்கிழார் கருத்தை முன் வைத்து எழுதப்பட்ட நாடகம் 'நீதிக்காக செய்த அநீதி' என்பது.

22.07.1978ல் வானொலியில் ஒலிபரப்பப்பட்ட இந்நாடகம் மேடைக்கேற்றதாக்கப்பட்டு கொழும்பு டி.எஸ்.சேனாநாயக்கா மகாவித்தியாலய தமிழ் மன்றத்தினரால் மேடையேற்றப்பட்டது.


மகாகவி பாரதியார், கவிதை தந்த பரிசு, நீதிக்காகச் செய்த அநீதி ஆகிய இந்த மூன்று நாடகங்களையும் 'தடயம்' என்னும் பெயரில் கலைஞர் மாத்தளை கார்த்திகேசுவின் குறிஞ்சி வெளியீடு 1992 மார்ச்சில் நூலாக வெளியிட்டுள்ளது என்பது மகிழ்வுடன் குறிப்பிடக்கூடியதே. இவர் எழுதிய இருபதுக்கும் மேற்பட்ட நாவல்கள் அனைத்துமே பத்திரிகைகளில் தொடர்கதைகளாக வந்தவைகளே. அவைகளுள்

தென்றலும் புயலும் (1956), நீதியே நீ கேள் (பாரி நிலையம் சென்னை – 1962), அவளுக்கு ஒரு வேலை வேண்டும் (தேசியகலை இலக்கிய பேரவை வெளியீடு – 2000) ஆகிய மூன்றும் நூலுரு பெற்றுள்ளன.

வெறும் கனவல்ல, தடையம் ஆகிய இரண்டும் இவருடைய நாடக நூல்கள்.

ஈழத்து முற்போக்கு இலக்கியமும் இயக்கமும் என்னும் இவருடைய நூல் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வரலாறு கூறும் நூல். எழுத்தாளர் கூட்டுறவு பதிப்பகம் 1994ல் இவருடைய இந்த வரலாற்று நூலை வெளியிட்டுள்ளது.

அமரர் இளங்கீரன் அவர்களின் அரங்கியல் பணிகளும் அவருடைய நாவலிலக்கியப் பணிகள் போலவே வாழ்த்துக்கும் பாராட்டுக்கும் உரித்தானவையே.



theliwathai.joseph@thaiveedu.com

## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

**கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்**
**உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்**
**மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.**

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**